DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 28.08.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.3/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.12 |
| Name | : | அந்தோணி மைக்கேல் |
| Father Name | : | கதர்கொடி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk of this court, on 28.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், ஏற்காடு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 13.03.2023-ம் தேதி 20.00 மணிக்கு காவல் நிலைய பணியில் இருந்தபோது கீரைக்காடு கிளேஷ் புருக் எஸ்டேட்டை சேர்ந்த மேலாளார் சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதை படித்து பார்த்து அதன் தன்மைக்கேற்ப ஏற்காடு காவல் நிலைய குற்ற எண். 49/2024 சட்டப்பிரிவுகள் 379 இதச ஆக பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் வாதியின் புகார் மனுவினை இணைத்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரம் இரவு நேரம் என்பதால் மறுநாள் 14.03.2024-ம் தேதி

காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் 1 அருணாசலம், 2 சுப்பிரமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அந்த பார்வை மகஜரில் பார்வை மகஜர் சாட்சிகளான அருணாசலம், சுப்பிரமணி ஆகியோரிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் வழக்கின் சாட்சிகளான சுரேஷ், அழகேசன், வெள்ளையன், சங்கி முண்டா, சுர்ஜீ முண்டா, அஜய் நாயார், பர்வின்குமார், சுப்பிரமணியம், கணேஷ் (எ) முருகப்பா, மாது, மல்லிகா, செல்வி, கோவிந்தம்மாள், அருணாசலம், சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் சங்கிமுண்டா, சுர்ஜீ முண்டா, அஜய் நாயார், பர்வின்குமார் ஆகிய 4 பேரும் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அதில் பர்வின்குமார் என்பவர் நன்றாக தமிழ் பேச தெரியகூடியவர் என்பதால் சங்கிமுண்டா, சுர்ஜிமுண்டா, அஜய்நாயார் ஆகியோர் இந்தியில் கொடுத்த வாக்குமூலத்தை இந்தி மொழி தெரிந்த பர்வின்குமார் தமிழில் மொழிபெயர்த்து சொன்னார். அதை அவர் சொன்னது போலவே வாக்குமூலமாக பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் எதிரி திருடி சென்ற வழக்கின் சொத்தினை எதிரியிடமிருந்து கைப்பற்றி கிளேஷ் புரூக் எஸ்டேட் அலுவலகத்தில் இவ்வழக்கின் புகார்தாரர் வைத்திருந்தார். மேற்படி வழக்கு சொத்தான ஒரு மூட்டை பச்சை மிளகு சுமார் 45 கிலோ எடையுள்ளது (காய்ந்தால் சற்று எடை குறையும்), 1/2 மூட்டை எடையுள்ள காய்ந்த மிளகு சுமார் 23 கிலோ, 3 மூட்டை காப்பிகொட்டை மொத்தம் சுமார் 61 கிலே மற்றும் எதிரி சம்பவ இடத்தில் விற்றுச்சென்ற எதிரிக்கு சொந்தமான TN 54 P 2621 என்ற பதிவெண் கொண்ட SPLENDOR இருசக்கர வாகனம் ஆகிவற்றை 14.03.2024–ம் தேதி பகல் 12.30 மணியளவில் கீரைக்காடு கிளேஷ் புரூக் எஸ்டேட் அலுவலகத்திலிருந்து சாட்சிகள் அருணாசலம் மற்றும் சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். வழக்கு சொத்தினை

கைப்பற்றியபோது அதனை எனது செல்போன் VIVO X60 மூலமாக புகைப்படம் எடுத்தேன். மேலும் வழக்கு சொத்துடன் எதிரி இருக்கும் புகைப்படத்தை புகார்தாரர் சுரேஷ் என்னிடம் ஒப்படைத்தார். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு வழக்கு சொத்துடன் நிலையம் வந்து கைப்பற்றபட்ட வழக்கு சொத்தினை படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சொத்துடன் சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்தை கைப்பற்றியபோது நான் எடுத்த **புகைப்படங்கள் 5 எண்ணிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சம்பவ இடம் சென்று விசாரணை செய்ததிலிருந்தும், சாட்சிகள் அளித்த வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் நடந்தது உண்மை என்று தெரியவந்தது தொடர்ந்து இந்த வழக்கின் எதிரியான கோவிந்தசாமி என்பவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்துவந்த காரணத்தினால் அவரை கைது செய்ய இயலவில்லை. இந்த சூழ்நிலையில் எதிரியானவர் மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றம், சேலம் வழங்கிய முன்பிணையில் சென்றார். பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டபிரிவுகள் 379 இதச–வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

இல்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.